RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 217 | ஆகஸ்டு.9 2025 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5



## அதிமுக ஆட்சி அமைந்த உடன் பட்டாசு தொழிலாளர்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டி தரப்படும்: இபிஎஸ் உறுதி

சிவகாசி: ஆக.9-

அதிமுக ஆட்சி அமைந்த உடன் பட்டாசு தொழிலாளர்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டி தரப்படும் என பட்டாசு ஆலையில் ஆய்வு செய்த பின்னர் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

சிவகாசி அருகே நாரணாபுரம் தனியார் பட்டாசு அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி நேரில் ஆய்வு செய்து, தொழிலாளர்களிடம் குறைகளை கேட்டறிந்தார். அப்போது சரவெடி தடையால் வேலை பற்றாக்குறை உள்ளதாகவும், வேறு தொழில்கள் தெரியாது என்பதால் கஷ்டப்படுகிறோம். அதிகாரிகள் எப்போது ஆய்வுக்கு வருவார்களோ என்ற அச்சத்துடன் பணியாற்றி வருகிறோம். நாங்கள் பாதுகாப்பாக பணியாற்றினாலும், அச்சம் காரணமாக விபத்து நடக்கிறது, என தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

அப்போது, தொழிலாளர்களிடம் உங்களுக்கு சொந்த வீடு உள்ளதா என கேள்வி எழுப்பிய, எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி, "அதிமுக ஆட்சி அமைந்த உடன் பட்டாசு தொழிலாளர்கள் உள்ளிட்ட ஏழைகளுக்கு இடம் வாங்கி கான்கிரீட் வீடு கட்டித் தரப்படும். மேலும் பட்டாசு தொழில் பிரச்சினை இல்லாமலும், அதே நேரம் பாதுகாப்பாகவும் நடக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்" என தெரிவித்தார்.



## விநாயகர் சதுர்த்தி விழாவில் முதல்வர் ஸ்டாலின் பங்கேற்க வேண்டும்: இந்து முன்னணி அழைப்பு

சென்னை: ஆக.9-

சென்னையில் 31ம் தேதி நடைபெறும் விநாயகர் சதுர்த்தி விழாவில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்க வேண்டும் என இந்து முன்னணி மாநில தலைவர் அழைப்பு விடுத்துள்ளார்.

சென்னை கோயம்பேட்டில் உள்ள இந்து முன்னணி தலைமை அலுவலகத்தில் மாநில தலைவர் காடேஸ்வரா சி.சுப்பிரமணியம் இன்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: இந்து முன்னணி 1980ல் ராம கோபாலனால் தொடங்கப்பட்டது. 1983ம் ஆண்டு சென்னையில் ஒரே ஒரு விநாயகர் சிலையை வைத்து ஓரிடத்தில் வைத்து விநாயகர் சதுர்த்தி பொது விழாவை தொடங்கினோம். தற்போது தமிழகம் முழுவதும் ஒன்றரை லட்சம் இடங்களில் விநாயகர் சிலைகள் பிரதிஷ்டை செய்து இந்து முன்னணி சார்பில் விழா எடுத்து கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்தாண்டு விநாயகர் சதுர்த்தி விழா வரும் 27ம் தேதி கொண்டாடப்படுகிறது. அந்தவகையில், இந்து முன்னணி சார்பில் நம்ம சாமி, நம்ம கோயில், நாமே பாதுகாப்போம் என்ற கருப்பொருளோடு இந்தாண்டு விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாடப்பட இருக்கிறது. சென்னையில் 5 நாட்கள் நடக்கும் விழா, ஆக.31ம் தேதி விசர்ஜனம் ஊர்வலத்துடன் நிறைவு பெறுகிறது.

கடந்த ஆண்டு தமிழகம் முழுவதும் ஒன்றரை லட்சம் இடங்களில் விநாயகர் சிலைகள் பிரதிஷ்டை செய்து விழா நடத்திய நிலையில், இந்தாண்டு அதை விட அதிகமான இடங்களில் விநாயகர் சிலைகள் பிரதிஷ்டை செய்து கொண்டாட இருக்கிறோம். சென்னையில், கடந்த ஆண்டு 5,501 சிலைகள் வைக்கப்பட்ட நிலையில், இந்த முறை புதிதாக பல இடங்களில் விநாயகர் பிரதிஷ்டை செய்து கொண்ட இருக்கிறோம்.

அதேபோல், தமிழகம் முழுவதும் சிறிய அளவிலான சிலைகள் 15 லட்சத்துக்கு மேற்பட்ட வீடுகளில் வைத்து வழிபட திட்டமிடப்பட்டுள்ளது. தமிழக அரசு ஒவ்வொரு ஆண்டு விநாயகர் சிலைகள் பிரதிஷ்டை செய்ய பல்வேறு வகையில் தடை ஏற்படுத்தி வருகிறது. ஆனாலும், அதையும் மீறி மக்கள் ஒத்துழைப்போடு விநாயகர் சதுர்த்தி விழா விமர்சையாக நடந்து வருகிறது.

தமிழக அரசு ரம்ஜானுக்கு இஸ்லாமியர்களுக்கு இலவசமாக அரசி கொடுப்பது போல, விநாயகர் சதுர்த்திக்கு அனைவருக்கு விநாயகர் சிலைகளை வழங்க வேண்டும். ரம்ஜான், பக்ரீத் பண்டிகளுக்கு முதல்வர் வாழ்த்து சொல்லி, அந்த நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார். அதேபோல, இந்தாண்டு சென்னையில் 31ம் தேதி நடைபெறும் விநாயகர் சதுர்த்தி விழாவில் முதல்வர் ஸ்டாலின் கலந்து கொள்ள வேண்டும்.

முதல்வர் ஸ்டாலின் நேரம் வழங்கினால், அவரை சந்தித்து அழைப்பு கடிதம் கொடுப்போம். மதுரை மாநாட்டுக்கும் அவருக்கு அழைப்பிதல் கொடுக்க அனுமதி கேட்டோம். ஆனால், அவர் அனுமதி வழங்கவில்லை. அதேபோல், தற்போது முதல்வர் ஸ்டாலின் அனுமதி கொடுப்பாரா என்பது தெரியவில்லை. இவ்வாறு அவர் கூறினார். செய்தியாளர் சந்திப்பின் போது மாநில செயலாளர் மணலி மனோகர், மாநில செய்தி தொடர்பாளர் இளங்கோவன் உடன் இருந்தனர்.

# கைத்தறி நெசவாளர்களுடைய வாழ்வை முன்னேற்றுவது நம்முடைய பொறுப்பு

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

சென்னை, ஆக.9-

சென்னை கலைவாணர் அரங்கத்தில் இன்று கைத்தறித்துறையின் சார்பில் நடைபெற்ற 11 வது தேசிய கைத்தறி நாள் விழாவில், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை:



கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் சார்பாக நடைபெறுகின்ற 11ஆவது தேசிய கைத்தறி நாள் விழாவில் பங்கேற்று உங்களையெல்லாம் ஒரே இடத்தில் சந்திப்பதில் நான் மிகுந்த பெருமையடைகின்றேன், மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த நிகழ்ச்சியை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள அமைச்சர் அண்ணன் காந்தி அவர்களுக்கும் மற்றும் துறையினுடைய அனைத்து அலுவலர்களுக்கும் என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இருக்க இடம், உண்ண உணவு, உடுத்த உடை என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் அத்தியாவசியத் தேவை என்பதை நீங்கள் அறிவீர்கள். அதில், உடுத்த உடை என்ற தேவையை பூர்த்தி செய்து வருகின்ற நெசவாளர்களுக்கும், திராவிட இயக்கத்திற்கும் இடையேயான உறவு இன்றைக்கு நேற்று உருவானது அல்ல. குறிப்பாக, 70 ஆண்டுகளுக்கு முன்பே நெசவாளர்களுடைய துயர் துடைப்பதற்காக களத்தில் நின்ற வரலாறு நம்முடைய கழகத்திற்கு உண்டு.

1953ஆம் ஆண்டில் தேங்கிக் கிடந்த கைத்தறித் துணிகளை, பேரறிஞர் அண்ணா அவர்கள் தெருத்தெருவாக சென்று விற்றார். இங்கே சென்னையிலே நம்முடைய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் ஒருநாள் முழுவதும் விற்பனை செய்தார்கள். அன்றைக்கு, அண்ணா, கலைஞர், அவர்களுடைய தம்பிகள் எல்லாம் சேர்ந்து ஒரே நாளில் விற்பனை செய்த தொகை எவ்வளவு தெரியுமா? மொத்தம் ஒரு லட்சம் ரூபாய்! அந்த காலத்தில் இது மிகப் பெரிய தொகை. இன்றைய மதிப்பில் கிட்டத்தட்ட 5 கோடி ரூபாயைத் தாண்டும்.

இதில் சென்னையில் கலைஞர் அவர்கள் மட்டும் 20 ஆயிரம் ரூபாய்க்கு கைத்தறித் துணிகளை விற்றார்கள். நெசவாளர்களுடைய வாழ்க்கை நிலை, அவர்களுடைய கவலைகளை முற்றிலும் உணர்ந்தவராக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் இருந்தார்கள். அதனால் தான், கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த போதெல்லாம் நெசவாளர்களுடைய வாழ்வை மேம்படுத்துவதற்கான பல்வேறு திட்டங்களை ஒவ்வொரு முறையும் தந்தார்கள்.

இன்றைக்கு தமிழ்நாட்டிலே சுமார் 2 இலட்சம் கைத்தறிகள் இருக்கின்றன. இரண்டரை லட்சம் நெசவாளர்கள் அதில் பணியாற்றுகிறீர்கள். கைத்தறிகள் எண்ணிக்கையின் அடிப்படையில் இந்தியாவிலேயே அசாம் மற்றும் மேற்கு வங்கத்திற்கு பிறகு இன்றைக்கு தமிழ்நாடு 3 ஆவது இடத்தில் இருப்பதற்கு என்னுடைய வாழ்த்துகள். தமிழ்நாட்டில் உற்பத்தியாகின்ற கைத்தறி துணிகளுக்கு இன்று உலகளவில் பெரிய அளவில் வரவேற்பு இருக்கிறது.

குறிப்பாக, நம்முடைய காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள், கோவை கோரா காட்டன் புடவைகள், பவானி ஜமக்காளம், மதுரை சுங்குடி புடவைகள், உள்ளிட்ட 10 கைத்தறிப் பொருட்களுக்கு நிமி என்று சொல்லப்படுகிற புவிசார் குறியீடு இன்றைக்கு கிடைத்திருக்கின்றது.

கைகளால் உற்பத்தி செய்யப்படுகிற பொருட்களுக்கு எப்போதும் ஒரு தனி மார்க்கெட் உண்டு. குறிப்பாக கடந்தாண்டு மட்டும் 1,146 கோடி ரூபாய் மதிப்பிலான கைத்தறி பொருட்கள் தமிழ்நாட்டில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

கைத்தறி நெசவாளர்களுக்கு நவீன தொழில்நுட்பம் சார்ந்த பயிற்சிகள், புதிய டிசைன்ஸ் குறித்த விழிப்புணர்வு போன்றவற்றை ஏற்படுத்தினால் அவர்களால் மென்மேலும் சாதிக்க முடியும். அப்படிப்பட்ட அளப்பரிய பணியைத் தான் நம்முடைய கைத்தறித் துறை அமைச்சர் அண்ணன் காந்தி அவர்கள் இன்றைக்கு தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார்.

அதுமட்டுமல்ல, அரசினுடைய இலவச வேட்டி, சேலை ஆர்டர்களின் மூலமும், பள்ளிக் குழந்தைகளுக்கான uniform துணிகளுக்கான ஆர்டர்கள் மூலமாகவும் இன்றைக்கு கைத்தறி நெசவாளர்களுடைய வாழ்வாதாரத்தை நம்முடைய திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் உறுதி செய்து வருகின்றார்.

குறிப்பாக, கடந்த 16 ஆண்டுகளில் இல்லாத வகையில், கடந்த ஆண்டு பொங்கலுக்காக 3 கோடியே 54 லட்சம் வேட்டி, சேலைகள் கொள்முதல் செய்யப்பட்டன. இதற்காக நிலுவைத் தொகையுடன் சேர்த்து நெசவாளர்களுக்கு 150 கோடி ரூபாய் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்கி இருக்கின்றார். அதுமட்டுமல்ல, கைத்தறி நெசவாளர்களுக்கு 300 யூனிட் அளவு கட்டணமில்லா மின்சாரம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்கி கொண்டு இருக்கிறார்.

நம்முடைய கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை, கோ ஆப்டெக்ஸ் மூலம் இன்றைக்கு லண்டன், ரஷ்யா, ஆஸ்திரேலியா, ஜெர்மனி போன்ற நாடுகளில் நடந்த சர்வதேச மீஜ் ஜீஷீக்களில் காட்சிப்படுத்தி நெசவாளர்களுக்கு இன்றைக்கு உற்சாகமும் உத்வேகமும் தந்திருக்கிறது நம்முடைய கைத்தறித் துறை.

ஆரணியில், 44 கோடியே 69 லட்சம் ரூபாய் செலவில் கலைஞர் நூற்றாண்டு நினைவு கைத்தறிப் பட்டுப் பூங்கா அமைக்கப்படவுள்ளது. இதற்கான பணிகள் இன்றைக்கு வேகமாக நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாட்டில் 10 இடங்களில் mini handloom parks அமைக்கப்படும் என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார். அதில் காஞ்சிபுரம் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் அந்த மினி பூங்காக்கள் இன்றைக்கு செயல்பாட்டிற்கு வந்துவிட்டது. ஆகவே, நம்முடைய திராவிட மாடல் அரசு என்றைக்கும் நெசவாளர்களுடைய முன்னேற்றத்திற்கு துணை நிற்கும்.

தாங்கள் சார்ந்திருக்கக் கூடிய கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் வளர்ச்சிக்கு பெருமளவில் பங்காற்றியதற்காக சிறந்த நெசவாளர் விருதும், innovative and marketable designs உருவாக்கியதற்காக சிறந்த designer விருதும் இன்றைக்கு வழங்கப்படுகிறது. விருதுகளைப் பெறுகின்ற உங்கள் அனைவருக்கும் நம்முடைய பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் கைத்தட்டல்கள் மூலம் தெரிவித்துக் கொள்வோம்.

தமிழ்நாட்டின் கைத்தறித் துறை என்பது மிக, மிகப் பாரம்பரியமான ஒரு துறை. இதனை மென்மேலும் வளர்த்தெடுத்து, நெசவுத் தொழிலையும், நெசவாளர்களுடைய வாழ்வையும் முன்னேற்றுவது நம்முடைய பொறுப்பு. அந்தப்பணியை நாம் அனைவரும் ஒன்றிணைந்து மேற்கொள்வோம்.

இவ்வாறு துணை முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

## மாணவர் விடுதிகளின் தரத்தை மேம்படுத்தாமல் பெயரை மாற்றினால் போதுமா? : நயினார் நாகேந்திரன்

சென்னை: ஆக.9-

மாணவர் விடுதிகளின் தரத்தை மேம்படுத்துவதை விட்டுவிட்டு பெயரை மட்டும் மாற்றினால் சமூகநீதியை நிலைநாட்டிட முடியுமா? என பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழகத்தில் உள்ள கள்ளர் சீரமைப்பு, சீர்மரபினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, பழங்குடியினர் நலத்துறை ஆகியவற்றின் கீழ் இயங்கி வரும் பள்ளிகளின் மாணவர் விடுதிகளை, 'சமூக நீதி விடுதிகள்' என்ற ஒரே குடையின் கீழ் இணைக்கும் திமுக அரசின் விளம்பர திட்டம் அபத்தமானது. இது முழுக்க முழுக்க அரசியல் ரீதியான காரணங்களால் முன்னெடுக்கப்பட்ட முயற்சி.

'ஆட்டோ கண்ணாடியைத் திருப்பினால் ஆட்டோ நன்றாக ஓடுமா' என்ற நகைச்சுவை வசனத்தை போல, போதிய ஆசிரியர்கள், குடிநீர், கழிவறை, தரமான உணவு உள்ளிட்ட எவ்வித அடிப்படை வசதிகளும் இல்லாத அரசு மாணவர் விடுதிகளின் தரத்தை மேம்படுத்துவதை விட்டுவிட்டு அவற்றின் பெயரை மட்டும் மாற்றி வைத்து சமூகநீதியை நிலைநாட்டிட முடியுமா என்பதை முதல்வர் ஸ்டாலின் சிந்திக்க வேண்டும்.

மேலும், பொதுவெளியில் சாதிரீதியிலான கருத்துகளை முன் வைக்கும் தலைவர்களைக் கட்சியில் வைத்துக் கொண்டு, சாதிய இயக்கங்களுடன் கூட்டணி வைத்துக் கொண்டு, சாதியை ஒழிக்கப் போவதாக போலித்தன அரசியல் பிழைப்பு நடத்தும் திமுகவுக்கு, பல போராட்டங்களாலும் உயர் தியாகங்களாலும் பெறப்பட்ட சமூகப் பாதுகாப்பினை அழித்தொழிக்க எந்த உரிமையும் இல்லை.

கேட்பாரற்று சிதிலமடைந்து கிடக்கும் அரசு விடுதிகளை சீர்செய்வதில் தான் அரசு கவனம் செலுத்த வேண்டுமே தவிர, வெறும் பெயர் மாற்றுவதைக் கொண்டு அவலத்தை மூடி மறைக்க முயல்வது ஒரு நல்ல தலைமைக்கு அழகல்ல. எனவே, முதல்வர் ஸ்டாலின் சமூகநீதி விடுதி என்ற பெயர் மாற்ற முடிவினைத் திரும்பப் பெற வேண்டும். கேட்பாரற்று சிதிலமடைந்து கிடக்கும் அரசு மாணவர் விடுதிகளை சீர்செய்வதில் ஆளும் அரசு கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கடந்த நான்கு ஆண்டுகளில் வேலூர் மாவட்டத்தில் 18,035 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு, தற்பொழுது 21.776 நபர்களுக்கு சட்டமன்ற தொகுதி வாரியாக பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகிறது

## மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா.சுப்புலெட்சுமி தெரிவித்துள்ளார்

வேலூர் மாவட்டத்தில் இலவச வீட்டுமனைப் பட்டாக்களை பெற்ற பயனாளிகள் தங்களின் மனம் நிறைந்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 25.6.2025 அன்று வேலூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வேலூர் மாவட்ட வருவாய் வட்டங்களுக்குட்பட்ட கிராமங்களில் ஆட்சேபனையற்ற அரசு புறம்போக்கு நிலங்களில் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் வீடு கட்டி வசித்து வரும் நபர்களுக்கு ஒருமுறை சிறப்பு வரன்முறை திட்டத்தின் கீழ் மற்றும் பல்வேறு திட்டங்களின்கீழ், நிலங்களை வரன்முறை செய்து 21,776 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் அடையாளமாக 12 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார்.

அதன்படி ஒருமுறை சிறப்பு வரன்முறை திட்டத்தின் கீழ், கிராம நத்தமாக வகைபாடு மாற்றம் செய்து வழங்கப்பட்ட பட்டா 2074, 5 ஆண்டுகளுக்கு மேல் ஆட்சேபனையற்ற புறம்போக்கு நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களுக்கு வழங்கப்பட்ட பட்டா (நகர்ப்புற உள்ளாட்சி பகுதிகள் தவிர) 1330, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் கிரையம் பெற்றவர்களுக்கு உட்பிரிவு செய்து வ ழங்கப்பட்ட பட்டா 10,000, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் கிரையம் பெற்றவர்களுக்கு உட்பிவு செய்து வழங்கப்பட்ட பட்டா 212, சர்க்கார் மனை வகைபாட்டிலிருந்து இரயத்துமனைகளாக மாற்றம் செய்யப்பட்டு வழங்கப்பட்ட பட்டா 240, ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் பட்டா வழங்கப்பட்டு தற்போது இணையவழியில் வழங்கப்பட்ட பட்டா 4,525, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் மூலம் பட்டா வழங்கப்பட்டு தற்போது இணையவழியில் வழங்கப்பட்ட பட்டா1473, நகர்ப்புற உள்ளாட்சி பகுதிகளில் ஆக்கிரமிப்பாளர்களுக்கு வரன்முறை செய்து வழங்கப்பட்ட பட்டா 1922 என மொத்தம் 21776 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படவுள்ளது.







இவ்வரசு பொறுப்பேற்ற கடந்த நான்கு ஆண்டுகளில் வேலூர் மாவட்ட வருவாய் வட்டங்களில் ஆதிதிராவிடர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்டோர்களுக்கான இணையவழி பட்டா மற்றும் நத்தம் வகைபாடு உள்ளிட்ட அனைத்து இனங்களில் 18,035 பட்டாக்கள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட 21,776 பட்டாக்களையும் சேர்த்து மொத்தம் 39.811 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படவுள்ளது என மாவட்ட திருமதி வே.இரா.சுப்புலெட்சுமி இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார். ஆட்சித்தலைவர்

இதனை தொடர்ந்து மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன், அவர்கள் காட்பாடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 9517 பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டாக்களை பொதுமக்களுக்கு வழங்குவதை தொடங்கி வைக்கும் விதமாக 2207.2025 அன்று காட்பாடி ரங்காலயா திருமண மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 572 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார். தொடர்ந்து 25.07.2025 அன்று வள்ளிமலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 283 பயனாளிகளுக்கும். அதனை தொடர்ந்து 26.07.2025 அன்று குகையநல்லூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 180 பயனாளிகளுக்கும் வீட்டுமனைப்பட்டாக்களை மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

அதனை தொடர்ந்து வேலூர் மற்றும் ஆற்காடு சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட 4224 பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டாக்களை பொதுமக்களுக்கு வழங்குவதை தொடங்கி வைக்கும் விதமாக வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.இரா. சுப்புலெட்சுமி, இ.ஆ.ப. அவர்களும், வேலூர் சட்டமன்ற உறுப்பினர் திருப. கார்த்திகேயன், அவர்களும், ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜெ.எல். ஈஸ்வரப்பன், அவர்களும் 23.07.2025 அன்று பேபி மஹாலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 965 பயனாளிகளுக்கு வீட்டுமனைப்பட்டாக்களை வழங்கினார்கள்.

அதனை தொடர்ந்து குடியாத்தம் மற்றும் ஆம்பூர் சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட 2070 பயனாளிகளுக்கு வீட்டுமனைப்பட்டாக்களை வழங்குவதை தொடங்கி வைக்கும் விதமாக குடியாத்தம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஊரக பகுதியிலுள்ள 500 பயனாளிகளுக்கு வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.இரா. சுப்புலெட்சுமி .இ.ஆ.ப., அவர்களும், குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி வி.அமுலு விஜயன், அவர்களும், ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.அ.செ. வில்வநாதன், அவர்களும் 29.07.2025 அன்று குடியாத்தம் நெல்லூர்பேட்டை ஜே.எஸ். மஹாலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார்கள்.

அதனை தொடர்ந்து கீ.வ.குப்பம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 1670 பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டாக்களை வழங்குவதை தொடங்கி வைக்கும் விதமாக 287 பயனாளிகளுக்கு மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன், அவர்கள் 02.08.2025 அன்று கீ.வ.குப்பம் பேருந்து நிலையம் அருகில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வீட்டுமனைப்பட்டாக்களை வழங்கினார்.

வேலூர் மாவட்டத்தில் இலவச வீட்டுமனைப் பட்டாக்களை பெற்ற பயனாளிகள் தெரிவித்ததாவது.

காட்பாடி வட்டம், குகையநல்லூர் பகுதியை சார்ந்த திரு.இராபர்ட், அவர்கள் தெரிவித்ததாவது.


வணக்கம் நான் காட்பாடி



வட்டம். குகையநல்லூர் பகுதியில் வசித்து வருகிறேன். எங்களுக்கு வீட்டுமனை பட்டா வேண்டி முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களை அணுகியபோது எங்களுக்கு வீட்டுமனை பட்டா கொடுத்தார்கள். இருந்தபோதிலும் அப்போது 113 பேருக்கு பட்டா கொடுத்தது செல்லாமல் போனது. ஸ்டே ஆர்டர் வாங்கி விட்டார்கள். இதனால் 20 வருடமாக எங்களுக்கு பட்டா கிடைக்காமல் போய்விட்டது. திரும்பவும் நாங்கள் மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அவர்களை அணுகியபோது அவர் அதற்குண்டான ஏற்பாடு செய்து எங்களுக்கு கொடுத்திருக்கிறார்கள். அதாவது 113 பேருக்கு வீட்டுமனை பட்டா அதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொள் கிறேன். மேலும் 113 பேருக்கும் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின்கீழ் வீடுகட்டி தரும்படி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு சிறிய வேண்டுகோள் வைக்கிறோம். கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின்கீழ் எங்களுக்கு வீடு கட்டி கொடுப்பார் என்று நம்பிக்கை உள்ளது. எனவே அனைத்து தரப்பு மக்களுக்கும் உதவிகளை செய்து வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய சார்பாகவும், 113 பேர் சார்பாகவும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துகொள்கிறேன்.

காட்பாடி வட்டம், சுகர்மில் பகுதியை சார்ந்த திருமதி ஸ்ரீபன் பிரியா அவர்கள் தெரிவித்ததாவது.

வணக்கம் என் பெயர் ஸ்ரீபன் பிரியா, நான் காட்பாடி வட்டம் சுகர்மில் துரைமுருகன்



நகரில் வசித்து வருகிறேன். நீண்ட நாட்களாக வீட்டுமனை பட்டா இல்லாமல் வீடுகட்டி வசித்து வந்தோம். பல்வேறு தடைகளை தாண்டி இந்த வீட்டுமனை பட்டா தற்போது வழங்கப்பட்டுள்ளது எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. இந்த வீட்டுமனை பட்டாக்களை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய சார்பாகவும், எங்களுடைய குடும்பத்தின் சார்பாகவும் நன்றியை தெரிவித்துகொள்கிறேன். மேலும் எல்லோருக்கும் எல்லாம் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதுபோன்ற சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருவது எங்களுடைய மனம் நிறைந்துள்ளது என தெரிவித்தார்.

காட்பாடி வட்டம், குகையநல்லூர் பகுதியை சார்ந்த திருமதி ஜான்சிராணி, அவர்கள் தெரிவித்ததாவது.

என்னுடைய பெயர் ஜான்சிராணி. நான் குகையநல்லூரில் வசித்து



வருகிறேன். தற்போது நாங்கள் 100க்கும் மேற்பட்டோர் வீட்டுமனைப்பட்டாக்களை பெற்றுள்ளோம். வீட்டுமனைப் பட்டா பெறுவது என்பது எங்களுடைய நீண்ட நாள் கனவு. தற்போது இது நிறைவேறியுள்ளது.

மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் சீறிய முயற்சியினால் எங்களுக்கு இந்த வீட்டுமனைப் பட்டா கிடைத்துள்ளது. சொந்த வீடு இல்லாமல் நிறையபேர் ரொம்ப கஷ்டபட்டு இருக்கும். தற்போது இந்து வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டது பெரு மகிழ்ச்சியாக உள்ளது. இந்த வீட்டுமனைப்பட்டா வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துகொள்கிறேன்.

காட்பாடி வட்டம், சுகர்மில் பகுதியை சார்ந்த திருமதி ராணி அவர்கள் தெரிவித்ததாவது.

வணக்கம் என்னுடைய பெயர் ராணி. நான் காட்பாடி சுகர்மில் பகுதியில் வசித்து



வருகிறேன். 19 வருடங்களாக எங்களுக்கு வீட்டுமனை பட்டா இல்லாமல் இருந்தது. இப்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அய்யா அவர்கள் எங்களுக்கு வீட்டுமனை பட்டா கொடுத்திருக்கிறார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு அனைத்து தரப்பு மக்களுக்கும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை செயல்படுத்தி வருகிறது. நீண்ட நாட்களுக்கு பிறகு இந்த வீட்டுமனை பட்டா பெற்றதன் மூலம் தன்னுடைய மனம் நிறைந்துள்ளது. மேலும் வீட்டுமனை பட்டா கொடுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பணிவான நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

**செய்தி வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், வேலூர்.**




பழனி கோட்டாட்சியர் அலுவலகம் முன்பு கீரனூரில் தனியார் ஆக்கிரமிப்பில் உள்ள

# 20 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலத்தை ஏழை விவசாயிகளுக்கு வீட்டுமனை பட்டா வழங்க கோரி மனு கொடுக்கும் போராட்டம்

பழனி, ஆக.09-

பழனி அடுத்த கீரனூரில் அருள்மிகு கண்டியம்மன் திருக்கோயில் உள்ளது. இக்கோயில் அருகே பேரூராட்சிக்கு சொந்தமான 23 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலம் உள்ளது. கடந்த 2000 ஆண்டு கண்டியம்மன் கோயில் கட்டிடப் பணிகளுக்காக இந்த நிலம் தற்காலிக பயன்பாட்டுக்காக பேரூராட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கோயிலுக்கு வழங்கப் பட்டது. காலப்போக்கில் திருக்கோயில் நிர்வாகம் இந்த நிலத்தை அவர்கள் பெயருக்கு பட்டா போட்டது மட்டுமன்றி அந்த இடத்தை தனியாருக்கு குத்தகைக்கு விட்டு வேலிகள் அமைத்துள்ளனர். இதனால் இந்த இடத்தை அடுத்துள்ள நிலங்களுக்கு செல்ல முடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர். இதனால் இன்று கோட்டாட்சியர் அலுவலகத்தில் கீரனூர் பொதுமக்கள் விவசாயிகள் மனு கொடுக்கும் போராட்டம் நடத்தினர். போராட்டத்துக்கு குழுவின் தலைவர் துர்க்கை ஈஸ்வரன் தலைமை வகித்தார். மாரியப்பன், துர்க்கை கண்ணன், சுப்புராம்,குமார் உள்ளிட்ட பலர் முன்னிலை வகித்தனர். போராட்டத்தின் போது புறம்போக்கு நிலத்தில் போடப்பட்டுள்ள வேலியை அகற்றி முறைகேடாக திருக்கோவிலுக்கு வழங்கப்பட்ட பட்டாவை ரத்து செய்து வீடில்லாத ஏழை விவசாயிகள், பொதுமக்களுக்கு நிலத்தை பிரித்து வழங்குமாறு கோஷங்கள் எழுப்பப்பட்டது. தொடர்ந்து கோட்டாட்சியரிடம் மனு வழங்கப்பட்டது.



■ தமிழ்நாடு மாநில திட்டக் குழுவால் செயல்படுத்தப்பட்டு வரும் வளமிகு வட்டார வளர்ச்சி திட்டத்தில் 2024–2025 ஆம் ஆண்டில் சிறந்த பங்காற்றியதற்காக மதுரை மாவட்ட திட்டமிடல் பிரிவிற்கு விருது வழங்கப்பட்டது இதனை மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.ஜே. பிரவீன் குமார் இ.ஆ.ப., அவர்களிடம் மதுரை மாவட்ட திட்டமிடல் பிரிவு அலுவலர்கள் சமர்ப்பித்து வாழ்த்து பெற்றனர்.



■ மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.த.மனோ தங்கராஜ் அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, தலைமையில் கன்னியாகுமரி பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழக வளாகத்தில் படகு சேவையின் இணையவழி பயணச்சீட்டு பதிவு செய்யும் வசதியை சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார்கள். உடன் தமிழ்நாடு மாநில உணவு ஆணையத்தலைவர் என்.சுரேஷ் ராஜன், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழக பொது மேலாளர் (சென்னை) திரு.தியாகராஜன், கன்னியாகுமரி நகர்மன்ற தலைவர் திரு.குமரி ஸ்டீபன் உட்பட பலர் உள்ளார்கள்.




# தாம்பரம் மாநகராட்சி பகுதியில் தெரு நாய்களுக்கு வெறிநாய்க்கடி தடுப்பூசி முகாம்

அஸ்தினாபுரம், ஆக.09-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி பகுதியில் தெரு நாய்களுக்கு வெறிநாய்க்கடி தடுப்பூசி முகாம் பொதுமக்களை பாதுகாக்க தாம்பரம் மாநகராட்சி அதிரடி திட்டம் தெரு நாய்களை விரட்டி விரட்டி பிடிக்கும் மாநகராட்சி ஊழியர்கள் தினமும் நூறு நாய்களுக்கு தடுப்பூசி போட்டு ஒரு நாளைக்கு 1000 ஏ ஆர் வி தடுப்பூசி என 45 ஆயிரம் முதல் 50 ஆயிரம் தடுப்பூசிகள் செலுத்த திட்டமிடப்பட்டுள்ளது

இந்தத் திட்டத்தால் நாய்களுக்கு நாய்க்கடி மூலம் பரவும் ரேபிஸ் நோயை தடுக்க முடியும்

நாய்கள் மூலம் மனிதர்களுக்கு ரேபிஸ் பரவுவதையும் தடுக்கலாம் வீட்டில் வளர்க்கப்படும் நாய்களை அருகில் உள்ள முகாம்களுக்கு அழைத்துச் சென்று தடுப்பூசி செலுத்துமாறு மாநகராட்சி வேண்டுகோள்

இன்று முதல் செப்டம்பர் மாதம் வரை அலுவலக நாட்களில் 50 நாட்களுக்கு இலவசமாக தடுப்பூசி செலுத்தப்படும் என தாம்பரம் மாநகராட்சி அறிவிப்பு தாம்பரம் மாநகராட்சியில் உள்ள ஐந்து மண்டலங்களில் மண்டல வாரியாக 10 தடுப்பூசி செலுத்தும் குழுக்கள் நிறுவப்பட்டுள்ளது

ஒவ்வொரு குழுவிலும் இரண்டு கால்நடை மருத்துவர்கள் இரண்டு துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் இரண்டு வாகன ஓட்டுனர்கள் ஐந்து நாய் பிடிக்கும் பயிற்சி பெற்ற பணியாளர்கள் உள்ளனர் மொத்தம் 125 நபர்களைக் கொண்டு குழு அமைக்கப்பட்டுள்ளது தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களின் பாதுகாப்பு நலன் கருதி தெருக்களில் சுற்றித்திரியும் தெருநாய்களுக்கு வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி (Rabies Vaccination) செலுத்தும் வகையில் அஸ்தினாபுரத்தில் நடைபெற்ற வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி முகாமினை பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி மேயர் வசந்தகுமாரி தொடங்கி வைத்து, தெருநாய்களுக்கு தடுப்பூசி செலுத்துவதைப் பார்வையிட்டனர். இந்நிகழ்ச்சியில், தாம்பரம் மாநகராட்சி கமிஷனர் சீ.பாலச்சந்தர் மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்

# “நிறைந்தது மனம்” நிகழ்ச்சியின் கீழ் செயற்கை கால் பெற்ற மாற்றுத்திறன் பயனாளிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, நேரில் சந்தித்து பயன்கள் குறித்து கேட்டறிந்தார்கள்







முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் மாற்றுத்திறன் படைத்தவர்களை மாற்றுத்திறனாளிகள் என அழைக்க வேண்டுமென தெரிவித்ததோடு, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாற்றுத் திறனாளிகளும் மற்ற நபர்களுக்கு இணையாக அனைத்து வகையிலும் வலுபெற வேண்டுமென்று மாற்றுத்திறனாளிகளின் நலன் கருதி மாற்றுத்திறனாளிகள் நலத்துறையினை உருவாக்கி, சிறப்பாக செயல்படுத்தி வந்தார்கள்.

அதனைத்தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு மாற்றுத்திறன் படைத்தவர்கள் சுயதொழில், உயர்கல்வி உள்ளிட்ட பல்வேறு விதங்களில் வாழ்வாதாரத்தை உயர்த்தி கொள்ள சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் மாற்றுத்திறனாளிகளுக்கு விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்ற மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 3ம் தேதி உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தினை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடங்கள் ஊதா வண்ணவிளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு, சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

தமிழ்நாட்டில் மாற்றுத் திறனாளிகளும் மற்ற நபர்களுக்கு இணையாக அனைத்து வகையிலும் வலுபெற வேண்டுமென்று தமிழ்நாடு அரசு மாற்றுத் திறனாளிகளின் நலன் கருதி பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து, சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

அதனடிப்படையில் மாற்றுத் திறனாளிகளுக்கான முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீடு அட்டை, மனவளர்ச்சி குன்றியோருக்கு பராமரிப்பு உதவித்தொகை, தசைச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டோருக்கான பராமரிப்பு உதவித்தொகை, தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தவருக்கான பராமரிப்பு உதவித்தொகை, சுய வேலைவாய்ப்பு (வங்கிக்கடன்), மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை, பார்வையற்றவர்களுக்கு வாசிப்பாளர் உதவித்தொகை, வேலைவாய்ப்பற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு நிவாரணத்தொகை, மாற்றுத் திறனாளிகளுக்கான இலவச பேருந்து பயணச்சலுகை, பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான இலவச பேருந்து பயணச்சலுகை, அரசு பேருந்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான 75 விழுக்காடு இலவச பேருந்து பயணச்சலுகை, இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், மோட்டார் பொருத்;திய தையல் இயந்திரம், மூன்று சக்கர சைக்கிள், சக்கர நாற்காலி, மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சிறப்பு சக்கர நாற்காலி, காதொலி கருவி, கருப்பு கண்ணாடி, மடக்கு ஊன்றுகோல் மற்றும் பிரெய்லி கைகடிகாரம், நவீன செயற்கை அவயம், செயற்கை அவயம், முடநீக்கு சாதனம்(காலிபர்), ஊன்றுகோல் வழங்கப்பட்டு வருகிறது.

தொடரந்து கை, கால் பாதிக்கப்பட்டவருக்கான திருமண உதவித்தொகை, பார்வையற்றவருக்கான திருமண உதவித்தொகை, செவித்திறன் குறைவுடையோருக்கான திருமண உதவித்தொகை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான திருமண உதவித்தொகை, மாற்றுத் திறனாளிகள் நலவாரிய அடையாள அட்டை மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான நடமாடும் சிகிச்சைப் பிரிவு போன்றவற்றை செயல்படுத்தி வருகிறது.

நமது கன்னியாகுமரி மாவட்டத்தில் 2021 ஆண்டு முதல் இதுநாள் வரை செயற்கை கால் வழங்கும் திட்டத்தின் கீழ் 70 மாற்றுத்திறன் பயனாளிகளுக்கு ரூ.1.02 கோடி மதிப்பில் செயற்கை கால்கள் வழங்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து மாற்றுதிறனாளிகளும் அரசு வழங்கும் நலத்திட்ட உதவிகளை பெற்று பயனடையுமாறும் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

நிறைந்தது மனம் திட்டத்தின் கீழ் செயற்கை கால் வழங்கும் திட்டத்தின் கீழ் பயனடைந்த வடலிவிளை பகுதியை சார்ந்த பயனாளி திரு. முத்துக்குமார் அவர்கள் தெரிவித்ததாவது:



எனது பெயர் முத்துகுமார். வயது 45, நான் வடலிவிளை பகுதியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எனக்கு இரண்டு குழந்தைகள் உள்ளன. கடந்த எட்டு வருடங்களாக நீரழிவு நோயினால் பாதிக்கப்பட்டு, ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்டு வந்தேன். இந்நோயின் காரணமாக எனது கால் பாதிக்கப்பட்டு, பலவீனம் அடைந்தது. எனவே மருத்தவர்களால் செயற்கை கால் பொருத்த பரிந்துரை செய்த தோடு, மாவட்ட ஆட்சியர் அலுவலக செயல்படும் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தி னார்கள். தற்போது செயற்கை கால் கிடைத்தமையால் எனக்கு பேருதவியாக இருக்கிறது. இதன் மூலம், எனது பணிகளை நானே மேற்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை ஏற்படுத்திய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நிறைந்த மனத்துடன் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

தொகுப்பு
**திரு.பா.ஜாண் ஜெகத் பிரைட்,**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்.
**திருமதி.எஸ்.செல்வலெட் சுஷ்மா,**
உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி)
கன்னியாகுமரி மாவட்டம்.



## ”உங்களுடன் ஸ்டாலின்” சிறப்பு முகாமை மேயர் இந்திராணி பொன்வசந்த் தொடங்கி வைத்து பார்வையிட்டார்

மதுரை, ஆக.09-

மதுரை மாநகராட்சி மண்டலம் 5, மண்டலம் 4 மற்றும் மண்டலம் 3 ஆகிய பகுதிகளில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமில் மாண்புமிகு மேயர் திருமதி.இந்திராணி பொன்வசந்த் அவர்கள் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறுவதை பார்வையிட்டார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் சிறப்பு முகாமினை கடந்த 15.07.2025 அன்று கடலூர் மாவட்டம் சிதம்பரம் நகராட்சியில் தொடங்கி வைத்து உள்ளார்கள். அதன் தொடர் நிகழ்வாக மதுரை மாநகராட்சியில் கடந்த 17.07.2025, 24.07.2025, 31.7.2025, 02.08.2025 மற்றும் 07.08.2025 ஆகிய நாட்களில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு கோரிக்கை மனுக்களை அளித்தனர். அதனை தொடர்ந்து மதுரை மாநகராட்சி மண்டலம் 3 (வார்டு எண்.55) பெரியார் பேருந்து நிலையம் சுற்றுலா தகவல் மையம், மண்டலம் 4 (வார்டு எண்.46, 47) ஆகிய பகுதிகளுக்கு சிந்தாமணி ரோடு புனித ஜோசப் மேல்நிலைப் பள்ளியிலும், மண்டலம் 5 (வார்டு எண்.97, 98) ஆகிய பகுதிகளுக்கு திருப்பரங்குன்றம் ஒக்கலிக்கர் திருமண மகாலில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம் நடைபெற்றது. இம்முகாமில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறுவதை மாண்புமிகு மேயர் அவர்கள் நேரில் பார்வையிட்டார்கள்.

இன்று நடைபெற்ற முகாமில் ஆதார் அட்டை பதிவு, மின்கட்டண சேவையில் பெயர் மாற்றம் வேண்டி விண்ணப்பித்த மனுதாரர்களுக்கு உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு அதற்கான அனுமதி ஆணையினை சம்பந்தப்பட்ட மனுதாரர்களுக்கு மாண்புமிகு மேயர் அவர்கள் வழங்கினார்கள்.

இந்நிகழ்வில் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.பூமிநாதன், துணை ஆணையாளர் திரு.ஜெய்னுலாபுதீன், உதவி ஆணையாளர்கள் திரு.பிரபாகரன், திருமதி. இராதா, மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மகேஸ்வரன், நிர்வாக அலுவலர்கள் திரு.சுரேஷ்பாபு, திரு.அகமது இப்ராஹிம், கண்காணிப்பாளர்கள், உதவி வருவாய் அலுவலர்கள், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி. சிவசக்தி ரமேஷ், திருமதி.சுவிதா, திருமதி. விஜயலெட்சுமி, திருமதி. பானு முபாரக்மந்திரி, திருமதி.விஜயா உட்பட அனைத்து துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



■ இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் விநாயகர் சதூர்த்தி விழாவை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டுவரும் முன்னேற்பாடுகள் குறித்த ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஜி.சந்தீஷ்,இ.கா.ப., அவர்கள் உள்ளார்.

## மாவட்டத்திலுள்ள அனைத்து அங்கன்வாடி மையங்கள், துணை சுகாதார நிலையங்கள், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் வருகின்ற 11.8.2025 அன்று குடற்புழு நீக்கம் மாத்திரை வழங்கும் முகாம்கள் நடைபெறவுள்ளது

### விடுபட்டவர்களுக்கான முகாம்கள் வருகின்ற 18.8.2025 அன்று நடைபெறவுள்ளது மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, ஆக.09-

தேசிய குடற்புழு நீக்க நாள் திட்டமானது, கடந்த ஆகஸ்ட் 2015 முதல் தேசிய அளவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி, 6 மாதத்திற்கு ஒரு முறை, பிப்ரவரி மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் குடற்புழு நீக்க நாள் அனுசரிக்கப்பட்டு வருகிறது. அதில், 2025 ஆம் ஆண்டிற்கான, இரண்டாம் சுற்று தேசிய குடற்புழு நீக்க நாள் வருகின்ற ஆகஸ்ட் 11 ஆம் தேதி அன்றும், விடுபட்டவர்களுக்கு வருகின்ற ஆகஸ்ட் 18 ஆம் தேதியன்றும், தமிழ்நாடு முழுவதும் அனுசரிக்கப்படவுள்ளது.

அதன்படி, தமிழகம் முழுவதும் அனைத்து அங்கன்வாடி மையங்கள், துணை சுகாதார நிலையங்கள், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள், கல்லூரிகளிலும் 1 முதல் 19 வயதிற்குட்பட்ட அனைவருக்கும் மற்றும் 20 30 வயதுடைய பெண்களுக்கு (கர்ப்பிணி பெண்கள், பாலுட்டும் தாய்மார்கள் தவிர்த்து) அங்கன்வாடி மையங்கள் மூலம் குடற்புழு நீக்க அல்பெண்டசோல் மாத்திரைகள் வருகின்ற 11.8.2025 அன்று காலை 09.00 மணி முதல் மாலை 04.00 மணி வரையிலும், விடுபட்டவர்களுக்கு வருகின்ற 18.8.2025 (திங்கட்கிழமை) அன்றும் வழங்கப்படவுள்ளது.

அதில், சிவகங்கை மாவட்டத்திலுள்ள 1 முதல் 19 வயது வரை உள்ள 3,77,552 பயனாளிகளுக்கும், 2030 வயது வரை உள்ள 87,625 பெண்களுக்கும் ( கர்ப்பிணி பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் தவிர்த்து) என மொத்தம் 4,65,177 பயனாளிகளுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கப்படவுள்ளது.

மேலும், குடற்புழு நீக்க அல்பெண்டசோல் மாத்திரை உட்கொள்வதினால், குடற்புழுக்கள் முற்றிலுமாக நீக்கப்படுகிறது. இரத்தசோகை மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு தடுக்கப்படுகிறது. உடல் வளர்ச்சி மற்றும் எடை அதிகரித்தல், பிற நோய் தொற்றுகளிலிருந்து எதிர்ப்பு, மேம்படுத்தப்பட்ட அறிவாற்றல், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்தல் போன்றவைகளுக்கும், சுறுசுறுப்பாகவும் இருக்க உதவுகிறது. நினைவாற்றல், கற்றல் திறன் மற்றும் உடல் வளர்ச்சியை மேம்படுத்தவும், பணியில் ஆர்வம், நீண்ட நேரம் வேலை செய்யும் திறனுடன் உடல் ஆரோக்கியமாக இருக்கவும் உதவுகிறது.

1 முதல் 2 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு லு அல்பெண்டசோல் மாத்திரை (200 மிகி) யும், இரண்டு வயதிற்கு மேல் 19 வயதிற்குட்பட்ட வளரிளம் பருவத்தினர் மற்றும் 2030 வயதுடைய கருவுறாத மற்றும் பாலூட்டாத பெண்களுக்கு ஒரு அல்பெண்டசோல் மாத்திரை (400 மிகி)யும் வழங்கப்படும். இக்குடற்புழு நீக்க மாத்திரை (அல்பெண்டசோல்) அனைவருக்கும் பாதுகாப்பானது. இம்மாத்திரையினை நன்றாக கடித்து மென்று சுவைத்து உட்கொள்ளுதல் அவசியமாகும்.

மேலும், திறந்தவெளியில் மலம் கழிப்பதை தவிர்த்து கழிவறையை பயன்படுத்துதல், ஈக்கள் மொய்க்காமல் சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருத்தல், காய்கறிகள் பழங்களை நன்கு கழுவிய பின்பே உட்கொள்ளுதல், பாதுகாப்பான சுத்தமான குடிநீரை பயன்படுத்துதல்,

நகங்களை வெட்டி சுத்தமாக வைத்திருத்தல், வெளியில் செல்லும் போது காலணிகளை அணிந்து செல்லுதல், உணவு உட்கொள்வதற்கு முன் சோப்ப போட்டு கைகளை கழுவுதல், கழிவறையை பயன்படுத்தியப் பின்பும் சோப்ப போட்டு கைகளை கழுவுதல் போன்ற வழிமுறைகளை பின்பற்றி குடற்புழு தொற்றிலிருந்து பாதுகாத்து கொள்ளலாம்.

எனவே, தேசிய குடற்புழு நீக்க முகாமில் அனைத்து 119 வயதிற்குட்பட்ட வளரிளம் பருவத்தினர் மற்றும் 2030 வயதிற்குட்பட்ட பெண்கள் ( கர்ப்பிணி பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் தவிர்த்து) கலந்து கொண்டு அல்பெண்டசோல் (குடற்புழு நீக்கம் மாத்திரை) மாத்திரைகளை உட்கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

## தென்காசி மாவட்டத்தில் நடைபெற்று வரும் ”உங்களுடன் ஸ்டாலின்” முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்

தென்காசி, ஆக.09-

தென்காசி மாவட்டம் செங்கோட்டை ஊராட்சி ஒன்றியம் கிளாங்காடு ஊராட்சியில் நடைபெற்று வரும் ''உங்களுடன் ஸ்டாலின்'' முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, ''உங்களுடன் ஸ்டாலின்'' திட்ட முகாம் பல்வேறு இடங்களில் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் இன்றைய தினம் தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் வட்டம் வார்டு எண் 6,7,8 ஆகியவற்றிற்கான முகாம் கீதாலயா தியேட்டர் அருகில் உள்ள கோதை திருமண மண்டபத்திலும், வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியம் வார்டு எண் 1,7ஆகியவற்றிற்கான முகாம் வாசுதேவநல்லூர் ஏழாவது வார்டு மண்டகப்படி தெருவிலுள்ள காமராஜர் கல்யாண மண்டபத்திலும், ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம் நல்லூர் ஊராட்சிக்கான முகாம் நல்லூர் ஊராட்சி மன்றம் அருகில் உள்ள சமுதாய நலக்கூடத்திலும், கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியம் ஆனைகுளம் ஊராட்சிக்கான முகாம் அருணாசலபுரம் சமுதாய நலக்கூடத்திலும், குருவிகுளம் ஊராட்சி ஒன்றியம் குளக்கட்டாகுறிச்சி ஊராட்சிக்கான முகாம் குளக்கட்டாகுறிச்சி சமுதாய நலக்கூடத்திலும், செங்கோட்டை ஊராட்சி ஒன்றியம் கிளாங்காடு ஊராட்சிக்கான முகாம் கிளாங்காடு சமுதாய நலக்கூடத்திலும் நடைபெற்று வருகிறது.

மேலும், (12.08.2025) அன்று கடையநல்லூர் வட்டம் வார்டு எண் 1,2,3 ஆகியவற்றிற்கான முகாம் கிருஷ்ணாபுரம், மேற்கு மலம்பாட்டை தெருவில் உள்ள சீதாலெட்சுமி திருமண மண்டபத்திலும், பண்பொழி பேரூராட்சி வார்டு எண் 1,7 ஆகியவற்றிற்கான முகாம் பண்பொழி, திருமலை முருகன் தேவர் கல்யாண மஹாலிலும், ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம் வாடியூர் ஊராட்சிக்கான முகாம் பரங்குன்றாபுரம் டி.எஸ் மஹாலிலும், கடையம் ஊராட்சி ஒன்றியம் மடத்தூர் ஊராட்சிக்கான முகாம் மடத்தூர் வள்ளியம்மாள்புரம் சமுதாயநலக்கூடத்திலும், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம் குணராமநல்லூர் ஊராட்சிக்கான முகாம் குணராமநல்லூர் புளிச்சிக்குளம் சேவை மையக்கட்டிடத்திலும், சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியம் வடக்குபுதூர் ஊராட்சிக்கான முகாம் வடக்கு புதூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியிலும் நடைபெறவுள்ளது.

எனவே, பொது மக்கள் அனைவரும் இம்முகாமினை பயன்படுத்தி பயன்பெற வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர் தெரிவித்துள்ளார்.



## காட்பாடி வடக்கு பகுதி திமுக கிளிதான்பட்டறையில் கலைஞரின் 7ம் ஆண்டு நினைவு நாள் முன்னிட்டு பி.விநாயகம் தலைமையில், மலர் தூவி மரியாதை

வேலூர், ஆக.09-
வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா கிளிதான்பட்டறை, காட்பாடி திமுக வடக்கு பகுதி சார்பில் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் 7ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அலங்கரிக்கப்பட்ட கலைஞர் திருவுருவப் படத்திற்கு 5வது

வார்டு வடக்கு பகுதி செயலாளர் பி.விநாயகம் தலைமையில், திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. இதில் சிறப்பு விருந்தினராக வடக்குப் பகுதி செயலாளர் வன்னியராஜா புஷ்பலதா கலந்துகொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினர். திரளான திமுக நிர்வாகிகள், உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.



## வேலூர் வேலப்பாடி முதியோர் இல்லத்தில் கலைஞரின் நினைவு நாள் முன்னிட்டு இந்து சமய அறநிலைத்துறை சார்பில் நலத்திட்ட விழா

வேலூர், ஆக.09-
வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, வேலப்பாடியில் உள்ள முதியோர் இல்லத்தில், கலைஞரின் 7ம் ஆண்டு நினைவு நாள் முன்னிட்டு, இந்து சமய அறநிலைத்துறை சார்பில், முதியோர்களுக்கு காலை உணவு மற்றும் வேட்டி சேலை உள்ளிட்ட நலத்திட்ட விழா, இந்து சமய அறநிலைத்துறை, அறங்காவலர் குழு மாவட்ட தலைவர் அசோகன் தலைமையில் நடைபெற்றது. இதில் ரவிச்சந்திரன், பூபதி, அருணகிரி, செல் சிவா, உமாபதி, மனோகரன் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள் என பலர் கலந்து கொண்டு இந்த நலதிட்ட விழாவை சிறப்பித்தனர்.



## காட்பாடியில் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் 7ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்திய திமுகவினர்

வேலூர், ஆக.09-
வேலூர் மாவட்டம், காட்பாடி திமுக தெற்கு பகுதி சார்பில், முன்னாள் முதல்வர் கருணாநிதியின் 7ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு காட்பாடி பேருந்து நிலையத்தில் திருவுருவ படத்திற்கு மலர் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதில் வேலூர் மாநகராட்சி துணை மேயரும், காட்பாடி தெற்கு பகுதி செயலாளருமான எம்.சுனில்குமார், காட்பாடி வடக்கு பகுதி செயலாளர் வன்னியராஜா, 1வது மண்டல குழு தலைவர் புஷ்பலதா வன்னியராஜா மற்றும் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் கே.அன்பு, ஜி.ரவிக்குமார், சித்ரா லோகநாதன், சித்ரா மகேந்திரன், கே.ஜி.சீனிவாசன், டீட்டா சரவணன், ரஜினி, மற்றும் வட்டச் செயலாளர்கள் சசிகுமார், சம்மந்தம், காட்பாடி வடக்கு பகுதி 5வது வார்டு பகுதி செயலாளர் பி.விநாயகம் மற்றும் முரளி பாஸ்கர் உட்பட ஏராலமான திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.




■ ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட மேல பார்த்திபனூர்,கீழ பார்த்திபனூர்,கள்ளிக்குடி குழந்தாபூரி சூடியூர் புதுக்குடி, P.புத்தூர் வழிமறைச்சான் ,ஏனாதி கோட்டை ஆகிய ஊராட்சிகளில் தமிழக முதல்வரின் கலைஞர் கனவு இல்லத்தின் கீழ் வீடு இல்லாத ஏழை எளியோருக்கு கொடுக்க வேண்டிய வீடுகளை பரமக்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பணிபுரியும் சரவணன் உதவி வட்டார வளர்ச்சி அலுவலர் (Sonal BDO) மற்றும் ராமர் ஓவர்சியர் ஆகிய இருவரும் கூட்டாக சேர்ந்து கொண்டு ஏற்கனவே ஒன்றுக்கு மேற்பட்ட கான்கிரீட் வீடு உள்ளவர்களுக்கு ஒரு பெரும் தொகையை கையூட்டாக பெற்றுக்கொண்டு கலைஞர் கனவு இல்ல வீடுகளை கொடுத்துள்ளதாக இப்பகுதி மக்கள் குற்றம் சாட்டி வருவதாக கூறப்படுகிறது இது சம்பந்தமாக மாவட்ட ஆட்சியர் உரிய விசாரணை மேற்கொண்டு இவர்கள் இருவரது பணிக்களத்தில் கொடுக்கப்பட்ட வீடுகளின் உண்மை தன்மையை ஆய்வு செய்து தமிழக அரசுக்கு கெட்ட பெயர் ஏற்படுத்தும் இவர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்..

## மண்ணிவாக்கத்தில் அருள்மிகு பெரியபாளையத்தம்மன் மற்றும் அருள்மிகு தெருவீதி அம்மன் ஆலயத்தில் ஆடி திருவிழாவை முன்னிட்டு பால்குடம் ஊர்வலம்

மண்ணிவாக்கம்,
ஆக.09-
செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்குளத்தூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட மண்ணிவாக்கம் ஊராட்சியில் பெரியபாளையத்தம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ள அருள்மிகு பெரியபாளையத்தம்மன் மற்றும் அருள்மிகு தெரு வீதி அம்மன் ஆலயத்தில் ஆடித்திருவிழாவை ஒவ்வொரு வருடமும் வெகு விமர்சியாக நடைபெற்று வருகிறது அந்த வகையில் இன்று ஆடி திருவிழாவ நான்காம் வாரம் இன்று காலை அம்மனுக்கு பதிப்போடுதலுடன் துவங்கப்பட்டு அதனைத் தொடர்ந்து காலை 8 மணி அளவில் பால் குடம் எடுத்தல் ஊர்வலம் நடைபெற்றது இதனை ஒட்டி அம்மனை வேண்டி விரதம் இருந்த பக்தர்கள்



இரத்தினாட்சி அம்மன் கோவிலில் இருந்து 101 பால்குடம் எடுத்து பம்பை உடுக்கையுடன் ஊர்வலமாக பெரியபாளையத்தம்மன் கோவிலில் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் ஆராதனை நடந்தது அதனைத் தொடர்ந்து பக்தர்களுக்கு பொதுமக் களுக்கும் அன்னதான வழங்கப்பட்டது இந்த நிகழ்ச்சிகான ஏற்பாடுகளை கோவில் நிர்வாகிகள் கௌரவ தலைவர் பொன்னுசாமி, தலைவர் இரா.ஆனந்தராஜ், செயலாளர் பொன் தர்மராஜ், பொருளாளர் வேலு, துணைத் தலைவர் வி.குமார், ஏ..ஜெயராமன், ஜான் என்கின்ற பன்னீர் செல்வம், இணைச்செயலாளர் அண்ணாதுரை, துணைச் செயலாளர்கள் ஆர்.பிரபு, எம்.எம்.சேகர், குட்டி என்கின்ற ராஜேந்திரன், எம்.சேசன், எ.சுந்தர், கோவில் நிர்வாகிகள் வீரப்பன், எம்.சண்முகம், சோமசுந்தரம், தங்கவேல், எம்.ஆர்.முனுசாமி, ராஜி என்கின்ற லோகேஸ்வரன், சீனிவாசன், செல்வராஜ், கோபி, எஸ்.ராஜா, பி.சண்முகம், என்.பாலா, ஆறுமுகம், நட்ராஜ், மற்றும் கோயில் நிர்வாகிகள் பொதுமக்கள் விழா குழுவினர் செய்திருந்தனர்

அதனைத் தொடர்ந்து 08.08.2025 காலை 11 மணி அளவில் திருகாப்பு கட்டுதல் 9.8.2025 சனிக்கிழமை மாலை மூன்று மணிக்கு மேல் கரகம் விதி உலா 10.8.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி அளவில் சந்தன காப்பு காலை 11மணி அளவில் அம்மனுக்கு குல்வார்த்தல் மாலை ஆறு மணி அளவில் கும்பம் படைத்தல் மற்றும் வான வேடிக்கையுடன் மாபெரும் நிகழ்ச்சி நடைபெறுகிறது பொதுமக்கள் பக்தர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது

## ஷார்ஜாவில் இறந்த இன்ஜினியரின் உடல் சொந்த ஊருக்கு கொண்டுவரப்பட்டது



கன்னியாகுமரி,
ஆக.09-
கன்னியாகுமரி மாவட்டம் அருமனையைச் சேர்ந்தவர் அனீஸ் (31) ஷார்ஜாவில் இன்ஜினியராக பணிபுரிந்த இவர் மர்மமான முறையில் காரில் இறந்து கிடந்தார்.

ஒரு மாதம் யாரும் தேடாததால் அனாதைப் பிணமாக வைக்கப்பட்ட இவரை, ஹோப் தமிழ் அமைப்பினர் கண்டறிந்து சொந்த ஊரான அருமனைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுத்தனர். திருவனந்தபுரம் விமான நிலையத்திற்கு உடல் நேற்று கொண்டுவரப்படுகிறது. அனீஸுக்கு திருமணமாகி 5 மாத பெண் குழந்தை உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



## வேலூரில், ரோட்டரி கிளப் வேலூர் பாலாறு சிட்டி மற்றும் மாசானிக் பிளட் சென்டர் சார்பில் இரத்ததான முகாம்

வேலூர், ஆக.09-
வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, ரோட்டரி கிளப் ஆப் வேலூர் பாலார் சிட்டி மற்றும் மாசோனிக் பிளட் சென்டர் சார்பில் இரத்ததான முகாம் வேலூர் மண்டி வீதியில் நடைபெற்றது. இதில் ரோட்ரி சங்க தலைவர் சுந்தர்ராஜ், செயலாளர் சாந்திபூஷன், பொருளாளர் பாலசுப்பிரமணி, இரத்ததான முகாம் தலைவர் லோகேஸ்வரன், மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





## தாம்பரம் மாநகராட்சி, 5வது மண்டலம், 45 - 46 ஆகிய வட்டங்களில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம்

தாம்பரம், ஆக.09-
செங்கல்பட்டு மாவட்டம் தமிழ்நாட்டிலுள்ள கடைகோடி மக்கள் அன்றாடம் அணுகும் அரசு துறைகளின் சேவைகள் திட்டங்களை அவர்களின் இல்லத்திற்கே சென்று வழங்கும் உங்களுடன் ஸ்டாலின் என்ற புதிய திட்டத்திற்க்கான சிறப்பு முகாமை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிதம்பரத்தில் துவக்கி வைத்ததை தொடர்ந்து தாம்பரம் மாநகராட்சி, 5வது மண்டலம், 45 - 46 ஆகிய வட்டங்களில் தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்கள் உங்களுடன் ஸ்டாலின் என்ற புதிய திட்டத்திற்க்கான சிறப்பு முகாமை துவக்கி வைத்து, பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார் மேலும் முகாமில் தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார் இந்நிகழ்வில் தாம்பரம் மாநகர மேயர் க.வசந்தகுமாரி, 5வது மண்டல குழு தலைவர், தாம்பரம் மேற்கு பகுதி செயலாளர் எஸ்.இந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் ரமணிஆதிமூலம், கொடி.ஆர்.தாமோதரன், வட்ட செயலாளர்கள் எம்.சீனிவாசகுமார், சீ.இளஞ் செழியன் பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாவட்ட மாநகர பகுதி அணிகளின் நிர்வாகிகள், வட்ட நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்



## அணைக்கட்டு நேமந்தபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் மாவட்ட ஆட்சியர் மாணவர்களின் கற்றல் திறன் குறித்து ஆய்வு

வேலூர், ஆக.09-
வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தாலுகா, நேமந்தபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, பார்வையிட்டு, மாணவ, மாணவிகளின் கற்றல் திறன்களை கேட்டறிந்தார். இந்நிகழ்வின்போது அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் நந்தகுமார், அணைக்கட்டு வட்டாட்சியர் வேண்டா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பாரி, ஹேமலதா, பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர் பெருமக்கள், அரசு துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.



■ திருப்பூர் மாவட்டம் மாநகராட்சி மண்டலம் 1, 15 வேலம்பாளையம் மண்டல அலுவலகத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் நடைபெற்ற முகாமில் பெறப்பட்ட மனுக்கள் குறித்து அலுவலர்களுடன் ஆணையாளர் எம்பி அமித் ஆய்வு மேற்கண்டார் இந்த திட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து தீர்வு காண வேண்டும் என அலுவலர்களுக்கு உத்தரவிட்டார் உடன் உதவி ஆணையாளர் மண்டலம் கணேஷ்குமார் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்..




## திருவஞ்சேரி ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் உங்களுடன் ஸ்டாலின் நிகழ்ச்சி

செங்கல்பட்டு,
ஆக.09-
செங்கல்பட்டு மாவட்டம் திருவஞ்சேரி ஊராட்சியில் காலை 9மணி முதல் மாலை 3 மணி வரை திருவஞ்சேரி ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் உங்களுடன் ஸ்டாலின் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியினை தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி துவங்கி வைத்தார் இதில் 15 துறைகளை சேர்ந்த உயர் அதிகாரிகள் கலந்து கொண்டு பொதுமக்களின் குறைகளை மனுக்களாக பெற்று நலத்திட்ட உதவிகளை வழங்கினர் இந்த நிகழ்ச்சியில் தலைவர் எஸ்.ஜனனி சுரேஷ்பாபு, துணைத்தலைவர் எஸ்.ருக்மணி சக்தி, வார்டு உறுப்பினர்கள் எஸ்.நாகலிங்கம், ஜி.சூர்யா பொன்னுவேல், எஸ்.இம்மானுவேல், ஜி.ஜெயசௌந்தரி ஞானசேகர், பி.செல்வி பாபுஜி, வட்டார வளர்ச்சி அலுவலர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர், பணி மேற்பார்வையாளர், ஊராட்சி செயலர் மற்றும் அனைத்து துறைகளைச் சார்ந்த அரசு அலுவலர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161